No. of Printed Pages : **11**

**6017**

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# PART - III

# இயற்பியல் / PHYSICS

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 70

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 70

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி – I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

**1.** *xy* தளம் ஒன்றில் துகளொன்று கடிகாரமுள் சுழலும் திசையில் சீரான வட்ட இயக்கத்தை மேற்கொள்கிறது எனில், அத்துகளின் கோணத் திசைவேகத்தின் திசை :

(அ) $-z$ திசையில் | (ஆ) $+y$ திசையில்

(இ) $-x$ திசையில் | (ஈ) $+z$ திசையில்

If a particle executes uniform circular motion in the *xy* plane in clockwise direction, then the angular velocity is in :

(a) $-z$ direction | (b) $+y$ direction

(c) $-x$ direction | (d) $+z$ direction

**2.** 8 g ஹீலியம் மற்றும் 16 g ஆக்ஸிஜன் உள்ள வாயுக்கலவையின் $\gamma = \frac{C_p}{C_v}$ மதிப்பு என்ன ?

(அ) 27/17 | (ஆ) 23/15

(இ) 17/27 | (ஈ) 15/23

The ratio $\gamma = \frac{C_p}{C_v}$ for a gas mixture consisting of 8 g of helium and 16 g of oxygen is :

(a) 27/17 | (b) 23/15

(c) 17/27 | (d) 15/23

**3.** வளைவுச்சாலை ஒன்றில் கார் ஒன்று திடீரென்று இடதுபுறமாகத் திரும்பும்போது அக்காரிலுள்ள பயணிகள் வலதுபுறமாகத் தள்ளப்படுவதற்கு பின்வருவனவற்றுள் எது காரணமாக அமையும் ?

(அ) ஓய்வில் நிலைமம் | (ஆ) திசையில் நிலைமம்

(இ) நிலைமமற்ற தன்மை | (ஈ) இயக்கத்தில் நிலைமம்

When a car takes a sudden left turn in the curved road, passengers are pushed towards the right due to :

(a) inertia of rest | (b) inertia of direction

(c) absence of inertia | (d) inertia of motion

**4.** π-ன் மதிப்பு 3.14 எனில் $\pi^2$-ன் மதிப்பு :

(அ) 9.86 (ஆ) 9.8596 (இ) 9.9 (ஈ) 9.860

If $\pi = 3.14$, then the value of $\pi^2$ is :

(a) 9.86 (b) 9.8596 (c) 9.9 (d) 9.860

**5.** கீழ்க்கண்டவற்றுள் எது ஸ்கேலர் அல்ல ?

(அ) அழுத்தம் (ஆ) பாகுநிலை

(இ) தகைவு (ஈ) பரப்பு இழுவிசை

Which of the following is not a scalar ?

(a) Pressure (b) Viscosity

(c) Stress (d) Surface tension

**6.** இரட்டை உருவாக்குவது :

(அ) சுழற்சி மற்றும் இடப்பெயர்ச்சி (ஆ) சுழற்சி இயக்கம்

(இ) இயக்கமின்மை (ஈ) இடப்பெயர்ச்சி இயக்கம்

A couple produces :

(a) Rotation and translation (b) Pure rotation

(c) No motion (d) Pure translation

**7.** கிடைத்தளத்தைப் பொருத்து 30° மற்றும் 60° கோணத்தில் இரண்டு பொருட்கள் எறியப்படுகின்றன. அவற்றின் கிடைத்தள நெடுக்கம் முறையே $R_{30^\circ}$ மற்றும் $R_{60^\circ}$ எனக் கருதினால், பின்வருவனவற்றுள் பொருத்தமான இணையைத் தேர்வு செய்க.

(அ) $R_{30^\circ} = \frac{R_{60^\circ}}{2}$ (ஆ) $R_{30^\circ} = R_{60^\circ}$

(இ) $R_{30^\circ} = 2R_{60^\circ}$ (ஈ) $R_{30^\circ} = 4R_{60^\circ}$

Two objects are projected at angles 30° and 60° respectively with respect to the horizontal direction. The range of two objects are denoted as $R_{30^\circ}$ and $R_{60^\circ}$. Choose the correct relation from the following :

(a) $R_{30^\circ} = \frac{R_{60^\circ}}{2}$ (b) $R_{30^\circ} = R_{60^\circ}$

(c) $R_{30^\circ} = 2R_{60^\circ}$ (d) $R_{30^\circ} = 4R_{60^\circ}$

**8.** ஈர்ப்பின் முடுக்கத்தின் மதிப்பு அதன் தற்போதைய மதிப்பினைப் போல நான்கு மடங்காக மாறினால் விடுபடு வேகம் :

(அ) பாதியாகும் (ஆ) மாறாது

(இ) 4 மடங்காகும் (ஈ) 2 மடங்காகும்

If the acceleration due to gravity becomes 4 times its original value, then escape speed :

(a) becomes halved (b) remains same

(c) 4 times of original value (d) 2 times of original value

**9.** 1 கிலோவாட் மணி என்பது (1 kWh) _________.

(அ) $36 \times 10^5$ J (ஆ) $36 \times 10^5$ WS

(இ) $3.6 \times 10^6$ J (ஈ) மேற்கூறிய அனைத்தும்

1 kilowatt hour (1 kWh) is :

(a) $36 \times 10^5$ J (b) $36 \times 10^5$ WS

(c) $3.6 \times 10^6$ J (d) All the above

**10.** புவியின் நிறையும் ஆரமும் இருமடங்கானால் ஈர்ப்பின் முடுக்கம் g :

(அ) 2g (ஆ) மாறாது

(இ) 4g (ஈ) $\frac{g}{2}$

If the mass and radius of the Earth are both doubled, then the acceleration due to gravity g :

(a) 2g (b) remains same

(c) 4g (d) $\frac{g}{2}$

**11.** திரிபிற்கான பரிமாண வாய்ப்பாடு :

(அ) $ML^{-2}T^{-1}$ (ஆ) $M^0L^0T^0$ (இ) $ML^{-1}T^{-2}$ (ஈ) $M^0LT^0$

The Dimensional formula for strain :

(a) $ML^{-2}T^{-1}$ (b) $M^0L^0T^0$ (c) $ML^{-1}T^{-2}$ (d) $M^0LT^0$

**12.** நீரின் உறைநிலைக்கும் அதன் கொதிநிலைக்கும் இடையே இயங்கும் வெப்ப இயந்திரத்தின் பயனுறுதிறன் :

(அ) 26.8% (ஆ) 6.25% (இ) 12.5% (ஈ) 20%

The efficiency of a heat engine working between the freezing point and boiling point of water is :

(a) 26.8% (b) 6.25% (c) 12.5% (d) 20%

**13.** சம நிறையுள்ள இரு பொருள்கள் $m_1$ மற்றும் $m_2$ ஒரே நேர்கோட்டில் முறையே 5 $ms^{-1}$ மற்றும் $-9$ $ms^{-1}$ என்ற திசைவேகங்களில் இயங்குகின்றன. மோதலானது மீட்சி மோதல் எனில், மோதலுக்குப்பின் $m_1$ மற்றும் $m_2$ பொருள்களின் திசைவேகங்கள் முறையே :

(அ) $-9$ $ms^{-1}$ மற்றும் 5 $ms^{-1}$

(ஆ) $-4$ $ms^{-1}$ மற்றும் 10 $ms^{-1}$

(இ) 5 $ms^{-1}$ மற்றும் 1 $ms^{-1}$

(ஈ) 10 $ms^{-1}$ மற்றும் 0 $ms^{-1}$

Two equal masses $m_1$ and $m_2$ are moving along the same straight line with velocities 5 $ms^{-1}$ and $-9$ $ms^{-1}$ respectively. If the collision is elastic, then calculate the velocities after the collision of $m_1$ and $m_2$ respectively.

(a) $-9$ $ms^{-1}$ and 5 $ms^{-1}$

(b) $-4$ $ms^{-1}$ and 10 $ms^{-1}$

(c) 5 $ms^{-1}$ and 1 $ms^{-1}$

(d) 10 $ms^{-1}$ and 0 $ms^{-1}$

**14.** குறுக்கலை ஒன்று A ஊடகத்திலிருந்து B ஊடகத்திற்கு செல்கிறது. A ஊடகத்தில் குறுக்கலையின் திசைவேகம் 500 $ms^{-1}$, அலைநீளம் 5 m. B ஊடகத்தில் திசைவேகம் 600 $ms^{-1}$, எனில் B-ல் அதிர்வெண், அலைநீளம் முறையே :

(அ) 120 Hz மற்றும் 6 m (ஆ) 120 Hz மற்றும் 5 m

(இ) 100 Hz மற்றும் 6 m (ஈ) 100 Hz மற்றும் 5 m

A transverse wave moves from a medium A to a medium B. In medium A the velocity of the transverse wave is 500 $ms^{-1}$ and the wavelength is 5 m. The frequency and the wavelength of the wave in medium B, when its velocity is 600 $ms^{-1}$, respectively are :

(a) 120 Hz and 6 m (b) 120 Hz and 5 m

(c) 100 Hz and 6 m (d) 100 Hz and 5 m

**15.** 'a' முடுக்கத்துடன் கிடைத்தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பள்ளி வாகனத்தின் மேற்கூரையில் கட்டித் தொடங்கவிடப்பட்ட தனிஊசல் ஒன்றின் அலைவுநேரம் :

(அ) $T \propto \sqrt{g^2+a^2}$ (ஆ) $T \propto \frac{1}{g^2+a^2}$

(இ) $T \propto (g^2+a^2)$ (ஈ) $T \propto \frac{1}{\sqrt{g^2+a^2}}$

A simple pendulum is suspended from the roof of a school bus which moves in a horizontal direction with an acceleration 'a', then the time period is :

(a) $T \propto \sqrt{g^2+a^2}$ (b) $T \propto \frac{1}{g^2+a^2}$

(c) $T \propto (g^2+a^2)$ (d) $T \propto \frac{1}{\sqrt{g^2+a^2}}$

## பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **24** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **6x2=12**

**Note :** Answer **any six** questions. Question number **24** is **compulsory**.

**16.** ரெனால்டு எண் என்றால் என்ன ?

What is Reynold's number ?

**17.** சுதந்திர இயக்கக்கூறுகள் – வரையறுக்கவும்.

Define the term 'degrees of freedom'.

**18.** சோனார் கருவி பொருத்தப்பட்ட ஒரு நீர்மூழ்கி கப்பலிலிருந்து அனுப்பப்பட்ட துடிப்பு 80 வினாடிகளுக்குப் பிறகு எதிரொலியாக எதிரி நீர்மூழ்கி கப்பலிலிருந்து பெறப்படுகின்றது. நீரில் ஒலியின் வேகம் 1460 $ms^{-1}$ எனில், எதிரி நீர்மூழ்கிக் கப்பல் உள்ள தொலைவு யாது ?

In a submarine equipped with sonar, the time delay between the generation of a pulse and its echo after reflection from an enemy submarine is observed to be 80 s. If the speed of sound in water is 1460 $ms^{-1}$, what is the distance of enemy submarine ?

**19.** வியனின் இடப்பெயர்ச்சி விதியைக் கூறுக.

State Wien's Displacement Law.

**20.** ஈர்ப்புத் தன்னிலை ஆற்றல் – வரையறுக்கவும்.

Define - gravitational potential.

**21.** தனிச்சீரிசை இயக்கம் என்றால் என்ன ?

What is simple harmonic motion ?

**22.** நியூட்டனின் இரண்டாவது விதியைக் கூறுக.

State Newton's second law.

**23.** கோண உந்த மாறா விதியைக் கூறுக.

State conservation of angular momentum.

**24.** துகள் ஒன்று $x$-அச்சுத் திசையில் நகர்கிறது என்க. அவ்வாறு அது நகரும்போது அதன் $x$-ஆய அச்சு 't' நேரத்தைப் பொருத்து $x = 2 - 5t + 6t^2$ என்ற சமன்பாட்டின்படி மாறுகிறது எனில் துகளின் ஆரம்பத் திசைவேகம் என்ன ?

A particle moves along the $x$-axis in such a way that its coordinates $x$ varies with time 't' according to equation $x = 2 - 5t + 6t^2$. What is the initial velocity of the particle ?

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **33 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

**6x3=18**

**Note :** Answer **any six** questions. Question number **33** is **compulsory**.

**25.** மீட்சி மற்றும் மீட்சியற்ற மோதல்களை ஒப்பிடுக.

Compare Elastic and Inelastic collision.

**26.** இழுத்துக் கட்டப்பட்ட கம்பியில் ஏற்படும் குறுக்கலைக்கான விதிகளை விளக்குக.

Discuss the Law of Transverse Vibrations in stretched strings.

**27.** ஒரு பொருளை நகர்த்த அப்பொருளை இழுப்பது சுலபமா ? அல்லது தள்ளுவது சுலபமா ? தனித்த பொருளின் விசைப்படம் வரைந்து விளக்குக.

Using free body diagram, show that whether it is easy to pull an object than to push it.

**28.** கொடுக்கப்பட்ட இரண்டு வெக்டர்களின், வெக்டர் பெருக்கலின் தொகுபயன் வெக்டரைக் காண்க.

$\vec{A} = 4\hat{i} - 2\hat{j} + \hat{k}$ மற்றும் $\vec{B} = 5\hat{i} + 3\hat{j} - 4\hat{k}$

What are the resultants of the vector product of two vectors given by $\vec{A} = 4\hat{i} - 2\hat{j} + \hat{k}$ and $\vec{B} = 5\hat{i} + 3\hat{j} - 4\hat{k}$ ?

**29.** துருவத் துணைக்கோள்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.

Write a short note on polar satellites.

**30.** பாகுநிலையின் ஏதேனும் மூன்று பயன்பாடுகளைக் கூறுக.

Give any three applications of viscosity.

**31.** திருப்பு விசை – வரையறுக்கவும். நடைமுறை வாழ்வில் திருப்பு விசை பயன்படுத்தப்படும் எடுத்துக்காட்டுகள் ஏதேனும் இரண்டு கூறவும்.

Define torque. Give any two examples of torque in day-to-day life.

**32.** சீரலைவு மற்றும் சீரற்ற அலைவு இயக்கம் என்றால் என்ன ? ஒவ்வொரு இயக்கத்திற்கும் இரு உதாரணங்கள் தருக.

What is meant by periodic and non-periodic motion ? Give any two examples, for each motion.

**33.** மனிதரொருவர் 2 kg நிறையுடைய நீரினை துடுப்பு சக்கரத்தைக் கொண்டு கலக்குவதன் மூலம் 30 kJ வேலையைச் செய்கிறார். ஏறத்தாழ 5 kcal வெப்பம் நீரிலிருந்து வெளிப்பட்டு கொள்கலனின் பரப்பு வழியே வெப்பக்கடத்தல் மற்றும் வெப்பக்கதிர் வீச்சின் மூலம் சூழலுக்குக் கடத்தப்படுகிறது எனில், அமைப்பின் அக ஆற்றல் மாறுபாட்டைக் காண்க.

A person does 30 kJ work on 2 kg of water by stirring using a paddle wheel. While stirring, around 5 kcal of heat is released from water through its container to the surface and surroundings by thermal conduction and radiation. What is the change in internal energy of the system ?

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5x5=25**

**Note :** Answer **all** the questions.

**34.** (அ) (i) பரிமாணப் பகுப்பாய்வின் பயன்பாடுகளைக் கூறுக.

(ii) $\frac{1}{2}mv^2 = mgh$ என்ற சமன்பாட்டை பரிமாணப் பகுப்பாய்வு முறைப்படி சரியானதா எனக் கண்டறிக.

**அல்லது**

(ஆ) நுண்புழையேற்ற முறையில் நீர்மம் ஒன்றின் பரப்பு இழுவிசைக்கான கோவையைத் தருவிக்கவும்.

(a) (i) Write the applications of the Dimensional Analysis.

(ii) Check the correctness of the equation $\frac{1}{2}mv^2 = mgh$ using dimensional analysis method.

**OR**

(b) Obtain an expression for the surface tension of a liquid by capillary rise method.

**35.** (அ) ஆற்றல் சமபங்கீட்டு விதியைக் கூறி விளக்குக.

**அல்லது**

(ஆ) மாறாத முடுக்கம் பெற்ற பொருளின் இயக்கச் சமன்பாடுகளை வருவிக்கவும்.

(a) State and explain equipartition of energy.

**OR**

(b) Derive the kinematic equations of motion for constant acceleration.

**36.** (அ) மெல்லிய கம்பியினால் இணைக்கப்பட்ட கனப்பொருட்களின் செங்குத்து இயக்கத்தை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) உயரத்தைப் பொருத்து ஈர்ப்பின் முடுக்கம் (g) எவ்வாறு மாறுபடும் என்பதை விளக்குக.

(a) Explain the motion of blocks connected by a string in vertical motion.

**OR**

(b) Explain the variation of acceleration due to gravity (g) with altitude.

**37.** (அ) சுருள்வில்லின் கிடைத்தள அலைவுகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) வேலை இயக்க ஆற்றல் தேற்றத்தைக் கூறி விளக்குக. வேலை இயக்க ஆற்றல் தேற்றம் உணர்த்துவதை விவாதிக்கவும்.

(a) Explain the horizontal oscillations of a spring.

**OR**

(b) State and explain work-kinetic energy theorem. Discuss the inferences of work-kinetic energy theorem.

**38.** (அ) சாய்தளத்தில் உருளுதலை விவரிக்கவும் மற்றும் அதன் முடுக்கத்திற்கான சமன்பாட்டைப் பெறுக.

**அல்லது**

(ஆ) மூடிய ஆர்கான் குழாயில் மேற்சுரங்கள் ஏற்படுவதை விளக்குக.

(a) Discuss rolling on inclined plane and arrive at the expression for the acceleration.

**OR**

(b) Explain how overtones are produced in a closed organ pipe.

**- o 0 o -**